முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 01.12.2025

O.S No. 266/2014

பிவா.சா.1-விக்னேஷ்குமார்

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கு 2014 ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆகும். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய தாக்கல் செய்த வழக்கு ஆகும் .நான் தாக்கல் செய்துள்ள நகராட்சி வரி ரசீதுகளில் எந்த ஆண்டு என்னுடைய பெயருக்கு மாற்றம் செய்தேன் என்றால் 2014 ஆகும். 2014 ல் எனக்கு கொடுக்கப்பட்ட ரசீதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை.

பிவா.சாஆ 42,43,44 ஆகிய ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கின் நிலுவையின் போது நான் ஆள்பலத்தையும், பணபலத்தையும் பயன்படுத்தி கிராம நிர்வாக அலுவலகத்தில் எனது பெயரில் கர ரசீதுகளை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரி.